# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 26 புதன்கிழமை 11.06.2025 கதிர் 222




யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - Yarl Muttram Youtube Channel




## குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில்

# ஒரு மணிநேரம் ரணில் இன்று வாக்குமூலம்



கொழும்பு, ஜூன் 11

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் இன்று புதன்கிழமை முன்னிலையாகி ஒரு மணித்தியாலம் வாக்குமூலம் வழங்கினார்.

இலங்கையில் மருந்து வகைகள் இறக்குமதி செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவினால் அளிக்கப்பட்ட முறைப்பாடு தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு இன்று அழைக்கப்பட்டிருந்தார்.

7➤

## ஜேர்மனியில் ஜனாதிபதி



கொழும்பு, ஜூன் 11

ஜேர்மனியக் கூட்டாட்சி குடியரசுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இன்று செவ்வாய்க்கிழமை காலை பெர்லினின் பிராண்டன்பேர்க் சர்வதேச விமான நிலையத்தைச் சென்றடைந்தார்.

7➤

## சிப்பாய் உட்பட இருவர் கைக்குண்டுடன் கைது!



கொழும்பு, ஜூன் 11

கைக்குண்டுடன் இராணுவச் சிப்பாய் உட்பட இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கம்பஹா - கடவத்தை, மஹகட சந்திப் பகுதியில் வைத்து மேற்படி இருவரும் இன்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

7➤

## முன்னாள் சிறை ஆணையாளருக்கு ஜூன் 25 வரை விளக்கமறியல் நீடிப்பு



கொழும்பு, ஜூன் 11

முன்னாள் சிறைச்சாலை ஆணையாளர் துஷார உபுல தெனியவை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி இன்று

7➤

## மட்டு. மாநகர சபையின் மேயராக ஊடகர் சிவம் பாக்கியநாதன் தெரிவு



மட்டக்களப்பு, ஜூன் 11

மட்டக்களப்பு மாநகர சபையின் மேயராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினரான ஊடகவியலாளர் சிவம் பாக்கியநாதன் இன்று புதன்கிழமை போட்டிகள் இன்றி தெரிவு செய்யப்பட்டார்.

இந்த மாநகர சபைக்கான மேயர், பிரதி மேயரைத் தெரிவு செய்யும் நிகழ்வு மாநகர சபை ஆணையாளர்

7➤



## வடக்கில் தோண்டத் தோண்ட மனிதப் புதைகுழிகள்! ராஜபக்ஷ போல் அநுரவும் கிடப்பில் போடக்கூடாது!!

### ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 11

"வடக்கில் தொடர்ந்து தோண்டப்படும் மனிதப் புதைகுழிகள் தொடர்பில் அநுர அரசு உரிய கவனம் செலுத்த வேண்டும். கடந்த ராஜபக்ஷ அரசு போல் இந்த விவகாரத்தை அநுர அரசும் கிடப்பில் போடக்கூடாது." – என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. வலியுறுத்தினார்.

யாழ். செம்மணி – சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர்

7➤

# யாழ் மாநகர சபையின் மேயர் பதவி தொடர்பில் தமிழரசுக் கட்சி வெளியிட்டுள்ள தகவல்!

கொழும்பு, ஜூன் .11

யாழ் மாநகர சபையின் மேயர் பதவிக்கு விவேகானந்தராஜா மதிவதனியை இலங்கைத் தமிழரசுக் கட்சி பரிந்துரைக்க தீர்மானித்துள்ளதாக அக்கட்சியின் பதில் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று (10) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், கட்சி மட்டத்தில் யாழ் மாநகர சபை மேயர் தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது யாழ் மாநகர சபையின் மேயர் பதவிக்கு விவேகானந்தராஜா மதிவதனியின் பெயரும், யாழ் மாநகர சபையின் துணை மேயர் பதவிக்கு இம்மானுவேல் தயாளனின் பெயரையும் பரிந்துரைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சி.வீ. கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ் மாநகர சபைக்கான மேயர், துணை மேயர் தெரிவுகள் எதிர்வரும் 13ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் சட்டவிரோதமாக பல கைதிகள் விடுவிப்பு!

கொழும்பு, ஜூன் .11

ஜனாதிபதி பொது மன்னிப்பை முறைகேடாகப் பயன்படுத்தி கைதியொருவரை விடுதலை செய்த முன்னாள் சிறைச்சாலை ஆணையர் ஜெனரல் துஷார உபுல்தெனிய, தனது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தியதாக சட்டமா அதிபர் திணைக்களம் நேற்று (10) கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் துறையின் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் தெரிவிக்கையில்,

உபுல்தெனிய வழக்கமான நடைமுறைகளை மீறி நீதி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரப்பூர்வ வெசாக் மன்னிப்புப் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாத கைதியான அதுல திலகரத்னவை விடுவித்ததாக நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

விடுவிக்கப்பட்ட நபர் மே 2ஆம் திகதி அனுராதபுரம் மேல் நீதிமன்றத்தால் குற்றவாளி என அறிவிக்கப்பட்டு தண்டனை உத்தரவினை எதிர்கொண்டிருந்தார்.

மேலும், கிறிஸ்துமஸ் மற்றும் சுதந்திர தினத்தின் போது சட்டத்தை மீறி இதேபோன்ற விடுதலைகளை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பீரிஸ் எடுத்துக்காட்டினார்.

முதற்கட்ட விசாரணைகளில் 57 கைதிகள் 2024 டிசம்பரில் சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்டதாகவும், 2025 சுதந்திர தினத்தன்று மேலும் 11 பேர் விடுவிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் கூறினார்



# பண்டாரவளை மாநகர சபை தேசிய மக்கள் சக்தி வசம்!

கொழும்பு, ஜூன் .11

பண்டாரவளை மாநகர சபையின் மேயராக தேசிய மக்கள் சக்தியின் மாநகர சபை உறுப்பினர் ரத்நாயக்க முதியன்செலாகே சாகர தீர விஸ்வவிக்ரம தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மேயர் பதவிக்காக இன்று நடைபெற்ற தேர்தலில் 04 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்று அவர் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

பண்டாரவளை மாநகர சபையில் தேசிய மக்கள் சக்தி 06 உறுப்பினர்களை கொண்டுள்ள அதேநேரத்தில்,

சுயேச்சை குழு எண்1, 05 உறுப்புனர்களை கொண்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி 03 உறுப்பினர்களை கொண்டுள்ளது.

சிறிலங்கா பொதுஜன பெரமுன 02 உறுப்புனர்களை கொண்டுள்ளது.

சுயேச்சை குழுக்கள் தலா ஒரு உறுப்பினர்களை கொண்டுள்ளன.

# ஷொக் கொடுத்தது மின்சாரம்: 15 சதவீதம் அதிகரிப்பு



*கொழும்பு, ஜூன் .11*

*மின்சாரக் கட்டணங்களில் 15 சதவீத அதிகரிப்பை இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணையம் (ருஊளுடு) புதன்கிழமை (11) அறிவித்துள்ளது. இந்த அதிகரிப்பு, 2025 ஜூன் 12, முதல் அமலுக்கு வரும் .*

*2025 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் பொருந்தும் திருத்தப்பட்ட கட்டணங்கள் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டன. (ஐ)*



# வவுனியாவில் மரக்கடத்தல் முறியடிப்பு

வவுனியாவில்பல்வேறு இடங்களில்வன வளத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போது சட்ட விரோத முறையில் கடத்தமுற்பட்ட முதிரைமரக்குற்றிகள் மீட்கப்பட்டுள்ளதாக வனவளத்திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் பற்றிதெரியவருவதாவது, வனவளத் திணைக்கள த்தினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மாவட்ட வன வள திணைக்கள அதிகாரி அஜித்ஜயசிங்கவின் நெறிப்படுத்தல் இன் கீழ் மாவட்ட வன வளஅதிகாரி உடார சஞ்சீவவின் தலைமையிலான வன வள உத்தியோகத்தர்கள் மற்றும் விசேடஅதிரடிப் படையினர் இணைந்து ஓமந்தை மற்றும் கூமாங்குளம் பகுதியில் விசேடநடவடிக்கை ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இந்த நடவடிக்கையின்போது 27 முதிரை குற்றிகள் மீட்கப்பட்டதுடன் இரு கப்ரக வாகனமும் மீட்கப்பட்டிருந்தது. இதே வேளை வவுனியாவில் உள்ள மரக்கிளையில் இருந்து அனுமதிபெறப்படாமல் 13 இலட்சம் பெறுமதியான தேக்குமரபலகைகள் மீட்கப்பட்டதுடன், பறய நாலங்குளம் பகுதியில் காடழிப்பில் ஈடுபட்டவர்களிற்கு எதிரான நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன்,காடழிப்புக்கு பயன்படுத்திய டோசர் வாகனமும் கைப்பற்றப்பட்டது.



## இலங்கை –கனடா நாடாளுமன்ற நட்புறவு சங்கம்



கொழும்பு, ஜூன் .11

பத்தாவது நாடாளுமன்றமன்றத்தின் இலங்கை கனடா நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் தலைவராக நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவுசெய்யப்பட்டார்.

இலங்கை கனடா நாடாளுமன்ற நட்புறவுச்சங்கத்தை மீள ஸ்தாபிப்பதற்கான கூட்டம் சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கடந்த 06ஆம் திகதி பாராளுமன்றத்தில்நடைபெற்றபோதே இத்தெரிவு இடம்பெற்றது.

இலங்கைக்கான கனேடியஉயர்ஸ்தானிகர் எரிக் வால்ஷ், இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டார். அத்துடன், அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் நாடாளுமன்றஉறுப்பினர்கள், பதவியணித் தலைமையதிகாரியும், நாடாளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகமுமான சமிந்த குலரத்ன உள்ளிட்ட பலரும் இதில் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த ஹெட்டியாராச்சி இலங்கை கனடா நாடாளுமன்றநட்புறவு சங்கத்தின் செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இங்கு கருத்துத்தெரிவித்த சபாநாயகர், இலங்கைக்கும் கனடாவுக்கும் இடையில் ஏழு தசாப்தத்திற்கு மேலாகக் காணப்படும் நீண்டகால உறவுகளை நினைவு கூர்ந்தார். இலங்கையின் 9வது பெரிய ஏற்றுமதி சந்தையாக கனடா விளங்குவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றங்களுக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய சபாநாயகர்,நாடாளுமன்ற நட்புறவுச் சங்கம் இரு நாட்டு சட்டமன்றங்களுக்கும் இடையில் முக்கிய பாலமாகச் செயற்படும் என்றார். இலங்கையில் காணப்படும் முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்து கனடா கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றும் சபாநாயகர் கேட்டுக்கொண்டார்.

பரஸ்பர நம்பிக்கை மற்றும் பகிரப்பட்ட மதிப்புக்களின் ஊடாக ஏற்படுத்தப்பட்டுள்ள இரு நாட்டுக்கும் இடையிலான உறவுகள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என இரு தரப்பினரும் வலியுறுத்தினர்.

புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட தலைவர் அமைச்சர் அநுர கருணாதிலக உரையாற்றுகையில், இரு நாடாளுமன்றங்களுக்கும் இடையில் ஒரு பாலமாக நட்புறவு சங்கத்தின் முக்கிய பங்கை வலியுறுத்தியதுடன், இலங்கைக்கும் கனடாவிற்கும் இடையே ஏற்கனவே வலுவான உறவுகளை ஆழப்படுத்த அர்த்தமுள்ள உறவுகளை இதன் மூலம் மேம்படுத்த முடியும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

இந்நிகழ்வில் நன்றியுரையாற்றிய நட்புறவு சங்கத்தின் சமிந்த ஹெட்டயாராச்சி, கனடாவின் நீடித்த நட்புக்கு அவர் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டதுடன், தொடர்ச்சியான ஒத்துழைப்புக்கான இலங்கையின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தினார்.

இலங்கை - கனடா நாடாளுமன்ற நட்புறவுச்சங்கத்தை மீள ஸ்தாபிப்பதற்கான கூட்டத்திற்கு முன்னர் கௌரவ சபாநாயகருக்கும், இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகருக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றது.

இதில் சட்டவாக்க செயற்பாடுகள் குறித்து மகாணசபை, உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட சகல தரப்பினருக்கும் தெளிவுபடுத்தல்களை வழங்கும் வகையில் நாடாளுமன்றத்தில் ஆய்வுமையமொன்றை விரைவில் அமைக்க இருப்பதாக சபாநாயகர் குறிப்பிட்டார். அத்துடன், ஊழல் மற்றும் மோசடியை ஒழிப்பதில் அரசாங்கம் உறுதியா நிலைப்பாட்டில் இருப்பதாகவும் அவர் எடுத்துக் கூறினார். (ஐ)

## மன்னாரில் ஆர்ப்பாட்டம்






மன்னார், ஜூன் .11

மன்னாரில் மக்களின் வாழ்வியலை பாதிக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் மன்னார் பிரஜைகள் குழு மற்றும் சிவில், பொது அமைப்புக்கள் இணைந்து புதன்கிழமை (11) காலை ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுத்தனர்.

மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இருந்து ஆரம்பமான கவனயீர்ப்பு பேரணி பிரதான வீதியூடாக மன்னார் பஜார் பகுதியை சென்றடைந்தது.

மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் தலைமையில் ஆரம்பமான ஆர்ப்பாட்ட பேரணியில் மன்னார் மாவட்டத்தில் உள்ள சிவில் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள்,சர்வமத தலைவர்கள், வர்த்தகர்கள், அரசியல் பிரதிநிதிகள் உள்ளடங்களாக ஆயிரக்கணக்கான மக்களும் கலந்து கொண்டனர்.

பேரணியில் கலந்து கொண்டவர்கள் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன்னால் ஒன்று கூடி பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர்.

இந்த நிலையில் மன்னார் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதிக்கு மகஜர் கையளிக்கும் வகையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனிடம் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு ஞானப்பிரகாசம் அடிகளார் மற்றும் சர்வமத தலைவர்கள் இணைந்து மகஜரை கையளித்தனர்.

மகஜரை பெற்றுக் கொண்ட அரசாங்க அதிபர், “மன்னார் மாவட்ட மக்கள் நீண்ட காலமாக காற்றாலை மற்றும் கணிய மணல் அகழ்வுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை குறித்து நான் நன்கு அறிவேன். மக்களின் கோரிக்கை அடங்கிய மகஜர் சர்வமத தலைவர்கள் ஊடாக ஜனாதிபதிக்கு வழங்கும் வகையில் என்னிடம் கை அளிக்கப்பட்டுள்ள நிலையில்,நான் உடனடியாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பேன்.” என தெரிவித்துள்ளார். (ஐ)

# பொய்யான வாக்குறுதிகளைக் கொடுத்து ஏமாற்றிய முதல்வர்: அண்ணாமலை தாக்கு



"அரசு டாக்டர்களை, பொய்யான வாக்குறுதிகள் கொடுத்து முதல்வர் ஸ்டாலின் ஏமாற்றி உள்ளார்" என தமிழக பா.ஜ., முன்னாள் தலைவர் அண்ணாமலை குற்றம் சாட்டி உள்ளார்.

அவரது அறிக்கை: கொரோனா பேரிடர் காலத்தில் பணியாற்றி உயிரிழந்த மருத்துவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும், உயிரிழந்த டாக்டர் விவேகானந்தன் மனைவிக்கு அரசு வேலை வழங்க வேண்டும். அரசாணை எண் 354 நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். மருத்துவ உட்கட்டமைப்புகள், போதிய பணி நியமனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள், தமிழக அரசு டாக்டர்களின் நீண்ட நாள் கோரிக்கைகளாக இருந்து வருகின்றன.

இவற்றை வலியுறுத்தி, பல்வேறு அறப்போராட்டங்களில் அரசு டாக்டர்கள் ஈடுபட்ட பிறகும், அவர்கள் குரலுக்கு தி.மு.க., அரசு செவிசாய்க்கவில்லை. தி.மு.க., எதிர்க்கட்சியாக இருந்தபோது, அப்போது போராட்டத்தில் ஈடுபட்ட டாக்டர்களை சந்தித்த முதல்வர் ஸ்டாலின், தி.மு.க., ஆட்சிக்கு வந்த உடன், டாக்டர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று வாக்குறுதி அளித்தார்.

ஆனால், கடந்த நான்கு ஆண்டுகளாக, அந்த வாக்குறுதியை நிறைவேற்ற, அவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தி.மு.க., அரசின் தொடர் புறக்கணிப்பால் விரக்தி அடைந்துள்ள டாக்டர்கள், முதல்வர் ஸ்டாலின் கவனத்தை ஈர்க்க, இன்று, மேட்டூரிலிருந்து சென்னை வரை, பாதயாத்திரை போராட்டம் தொடங்கியுள்ளனர்.

கொரோனா போன்ற பெருந்தொற்று காலத்திலும், தன்னலமின்றி பணியாற்றிய அரசு டாக்டர்களை, பொய்யான வாக்குறுதிகள் கொடுத்து ஏமாற்றிய முதல்வர் ஸ்டாலின், நான்கு ஆண்டுகள் கடந்தும், இன்னும் அவர்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற எந்த நடவடிக்கையும் எடுக்காமல், போராடும் நிலைக்குத்தள்ளியிருப்பது, துரதிருஷ்டவசமானது.

வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. உடனடியாக, அரசு டாக்டர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி, அவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற தமிழக அரசு முன்வர வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். இவ்வாறு அண்ணாமலை கூறியுள்ளார். (ஐ)

## கூடுதலான தொகுதிகளில் போட்டியிட வேண்டும்: மார்க்சிஸ்ட் கட்சி மீண்டும் திட்டவட்டம்



"2026ம் ஆண்டு சட்டசபை தேர்தலில், மார்க்சிஸ்ட் கூடுதல் தொகுதிகளில் போட்டியிட வேண்டும் என்பது முக்கியமானது" என மார்க்சிஸ்ட் மாநிலச் செயலர் சண்முகம் தெரிவித்தார்.

சென்னையில் இன்று (ஜூன் 11) நிருபர்கள் சந்திப்பில், மார்க்சிஸ்ட் மாநிலச் செயலர் சண்முகம் கூறியதாவது: நாங்கள் போட்டியிட்ட தொகுதிகளை வைத்து கொண்டு ஓட்டு சதவீதம் இப்படி தான் இருக்கிறது என்று சொல்லக் கூடாது. பா.ஜ., அ.தி.மு.க., ஒரு சந்தர்ப்பவாத கூட்டணியை ஏற்படுத்தி கொண்டு, அந்த கூட்டணியை வலுப்படுத்தும் முயற்சியில் அந்த கட்சி தலைவர்கள் ஈடுபட்டு இருக்கிறார்கள். ஆகவே அந்த கூட்டணியை தோற்கடிப்பது என்பது மிக முக்கியமான ஒன்று. அ.தி.மு.க., பா.ஜ., கூட்டணியை தோற்கடிக்கும் வலிமை இப்போது இருக்கும் அரசியல் சூழ்நிலையில் தி.மு.க., தலைமையிலான அணிக்கு தான் இருக்கிறது. ஆகவே தி.மு.க., தலைமையிலான கூட்டணி சார்பில் தான் 2026ம் ஆண்டு சட்டசபை தேர்தலை சந்திக்க மார்க்சிஸ்ட் கட்சி முடிவு செய்துள்ளது.

பா.ஜ., அ.தி.மு.க., கூட்டணியை தோற்கடிக்க வேண்டும் என்பது மார்க்சிஸ்ட் கட்சியின் தீர்மானம். அதற்கு ஏற்ப எங்கள் அரசியல் அணுகுமுறை இருக்கும். அதே நேரத்தில், 2026ம் ஆண்டு தேர்தலில், மார்க்சிஸ்ட் கட்சி கூடுதலான தொகுதிகளில் போட்டியிட வேண்டும். கூடுதலான எண்ணிக்கையில் சட்டசபைக்கு கட்சி உறுப்பினர்கள் செல்ல வேண்டும். அ.தி.மு.க., பா.ஜ., கூட்டணியை தோற்கடிக்க வேண்டும் என்று நாங்கள் எடுத்து இருக்கும் தீர்மானம் எவ்வளவு முக்கியமோ? அதே அளவுக்கு, மார்க்சிஸ்ட் கூடுதல் தொகுதிகளில் போட்டியிட வேண்டும் என்பது முக்கியமானது. இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

## 2026ல் இ.பி.எஸ்., தலைமையில் தான் ஆட்சி: நயினார் நாகேந்திரன் பேட்டி



திருநெல்வேலி: "2026ல் அ.தி.மு.க., பொதுச்செயலாளர் இ.பி.எஸ்., தலைமையில் தான் ஆட்சி அமைப்போம். தமிழகத்தில் பா.ஜ., கூட்டணிக் கட்சியின் ஆட்சி தான் நடைபெறும்." என தமிழக பா.ஜ., தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

திருநெல்வேலியில் நிருபர்கள் சந்திப்பில் நயினார் நாகேந்திரன் கூறியதாவது: தமிழத்தில் கடந்த 11 ஆண்டுகளில் ரூ.10 லட்சம் கோடி மத்திய அரசு வழங்கி உள்ளது. தேர்தலுக்கு இன்னும் நாட்கள் இருக்கிறது. சில பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டு இருக்கிறது. நிறைய பேர் தே.ஜ., கூட்டணிக்கு வருவார்கள். இதற்கு நிறைய வாய்ப்புகள் இருக்கிறது.

2026ல் அ.தி.மு.க., பொதுச்செயலாளர் இ.பி.எஸ்., தலைமையில் தான் ஆட்சி அமைப்போம். தமிழகத்தில் பா.ஜ., கூட்டணிக் கட்சியின் ஆட்சி தான் நடைபெறும். கீழடியில் நான் நேரில் சென்று ஆய்வு நடத்தி, உதவி தேவைப்பட்டால் மத்திய அரசிடம் வலியுறுத்துவேன்.

திருக்குறளை 63 மொழிகளில் மொழிபெயர்த்து உலகம் முழுவதும் பிரதமர் மோடி கொண்டு சேர்த்துள்ளார். காசியிலும் குஜராத்திலும் தமிழ்ச் சங்கங்களை நடத்தியது மிகப்பெரிய பெருமை. தமிழ் மொழிக்கு பா.ஜ., அரசு அளிக்கும் முக்கியத்துவத்தை இது காட்டுகிறது. இவ்வாறு நயினார் நாகேந்திரன் கூறினார்.

'மதவாதம்' குறித்த கேள்விக்கு பதிலளித்த நயினார் நாகேந்திரன், 'எங்கும் மதவாதம் இல்லை. ஒரு மதத்தை நம்பி யாரும் ஆட்சிக்கு வர முடியாது. இந்தியாவில் பிறந்த அனைவரும் ஹிந்துக்கள். ஹிந்து என்பது ஒரு பண்பாடு, ஒரு வழிமுறை. ஹிந்து என்ற மதம் இல்லை,' என்றார். (ஐ)

## கொலை செய்யும் போது நேரில் பார்த்தேன்: தேனிலவுக்கு அழைத்து சென்று கதையை முடித்த மனைவி 'பகீர்'

"மேகாலயாவுக்கு தேனிலவு சென்றபோது, கணவனை கூலிப்படை வைத்து கொலை செய்தேன். கொலை செய்த போது நேரில் பார்த்தேன்'' என இந்துாரைச் சேர்ந்த தொழிலதிபர் ராஜா ரகுவன்ஷியின் மனைவி சோனம் தெரிவித்தார்.

மத்திய பிரதேசத்தின் இந்துாரைச் சேர்ந்த தொழிலதிபர் ராஜா ரகுவன்ஷி, 30. இவருக்கும், சோனம், 24, என்பவருக்கும், கடந்த மாதம் 10ம் தேதி திருமணம் நடந்தது. இதை அடுத்து, இருவரும் தேனிலவுக்காக வடகிழக்கு மாநிலமான மேகாலயா சென்றனர். பின்னர் தேனிலவுக்கு சென்ற தம்பதி மாயமானதை அடுத்து, அவர்களை தேடும் பணி முடுக்கிவிடப்பட்டது.

ராஜாவைக் கொன்றுவிட்டு மர்மநபர்கள், சோனமை கடத்தியிருக்கலாம் என்ற கோணத்தில் விசாரணை நடந்தது. சோனம் அளித்த வாக்குமூலத்தின் அடிப்படையில், இந்த கொலை சம்பவத்தில் மேலும் நான்கு பேர் கைது செய்யப்பட்டனர். இந்நிலையில், ராஜா ரகுவன்ஷியை கொலை செய்ததை, குற்றவாளிகள் ஒப்புக்கொண்டார்.

"மேகாலயாவுக்கு தேனிலவு சென்றபோது, கணவனை கூலிப்படை வைத்து கொலை செய்தேன். கொலை செய்த போது நேரில் பார்த்தேன்'' என மனைவி சோனம் தெரிவித்தார். இது குறித்து ஏ.சி.பி., யாதவ் கூறியதாவது: ராஜா ரகுவன்ஷி தாக்கப்பட்டபோது சோனம் சம்பவ இடத்திலேயே இருந்துள்ளார். அவர் கொலை செய்யப்படுவதைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ராஜா ரகுவன்ஷியைக்கொன்றதாக நான்கு குற்றவாளிகளும் ஒப்புக்கொண்டுள்ளனர். முதல் அடியை விக்கி தாக்கூர் என்கிற விஷால் அடித்தார். குற்றம் சாட்டப்பட்டவர்களில் விஷால், ஆகாஷ் மற்றும் ஆனந்த் ஆகிய மூவரும் இந்தூரிலிருந்து ரயிலில் இருந்து வந்துள்ளனர். அவர்கள் மேகாலயாவை அடைய பல ரயில்களை மாற்றிக்கொண்டனர்.

மூவரின் பயணச் செலவுகளுக்காக தலா ரூ.40,000–50,000 கொடுத்து நிதி உதவி செய்தேன். கொலைக்குப் பிறகு சோனம் மேகாலயாவில் தங்கிவிட்டாரா அல்லது இந்துாருக்குத் திரும்பினாரா என்பது தெளிவாகத் தெரியவில்லை. அந்த விவரம் மேகாலயா காவல்துறையால் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. இவ்வாறு அவர் கூறினார். (ஐ)



# 150 ஆண்டுகள் உயிர் வாழமுடியுமா?



குழந்தைகள் முதல் வயதானவர்கள் வரை இலட்சக்கணக்கானவர்களிடம் இரத்த பரிசோதனை செய்த ஆராய்ச்சியாளர்கள், "இரத்த பரிசோதனைமூலம் ஒருவரின் வயதைக் கணிக்கலாம். மேலும் இதனை வைத்து மனிதனின் அதிக பட்ச வாழ்நாளையும் அறியலாம்" என கண்டறிந்துள்ளனர்.

மனிதர்களின் ஆயுள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. கடந்த 60 ஆண்டுகளில் உலக மக்களின் ஆயுள் படிப்படியாக அதிகரித்துக் கொண்டேதான் போகின்றது. இந்த நிலையில் "மனிதர்களின் உண்மையான ஆயுள் காலம்தான் என்ன?" என்பதை அறிவியல் அடிப்படையில் இந்தக் கட்டுரையில் பார்ப்போம்.

### நாழிகைப்பூச்சியின் ஆயுள்

நாம் ஒரு விந்தையான உலகத்தில் வாழ்ந்து வருகின்றோம். இவ்வுலகில் வாழும் கோடான கோடி உயிரினங்களில் நாழிகைப்பூச்சியும் (ஆயலகடல) ஒன்று. இவைப் பார்க்கச் சிறிய தட்டான் மாதிரி இருக்கும்.

இவைப் பறக்க ஆரம்பித்த 24 மணி நேரம் மட்டுமே உயிர் வாழ்கின்றன. இந்த ஒருநாளுக்குள் தன் ஜோடியைக் கண்டறிந்து இணைந்து, நீரின் மேற்பரப்பில் நிறைய முட்டைகளையிட்டு இறந்து விடுகின்றன!

### சுறா மீன் ஆயுள்

கிரீன்லாந்தை ஒட்டிய அட்லாண்டிக் பெருங்கடலில் ஒரு பெரிய சுறா மீன் வாழ்கிறது. இந்தச் சுறா மீன் கடந்த 400 வருடங்களாக உயிர் வாழ்ந்து வருகின்றது! அதாவது இந்தச் சுறா அக்பர் இந்தியாவை ஆண்ட காலத்தில் பிறந்தது. அதிசயிக்கும் வகையில் இது இன்றும் உயிர் வாழ்ந்து வருகின்றது!

### 80 ஆயிரம் ஆண்டுகள் வாழும் மரம்

இதற்கு எல்லாம் மேலாக அமெரிக்க ஐக்கிய நாட்டின் யூட்டா என்ற மாநிலத்தில் ஒரு மரம் 80 ஆயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றது. ஆச்சரியம் என்னவென்றால் இந்தக் காலத்தில்தான் தற்கால மனிதன் ஆபிரிக்காவிலிருந்து ஆசியக் கண்டத்திற்குள் குடிபெயர்ந்தான்! அன்று பிறந்த இந்த மரம் இன்றும் உயிர்வாழ்ந்து வருவது அதிசயமே!

இவ்வாறாகப் பூமியில் வாழும் உயிரினங்களின் வாழ்நாள்களில் மிகப் பெரிய அளவிலான வித்தியாசத்தைப் பார்க்கலாம்.

### மனிதர்களின் வாழ்நாள்

ஆச்சரியப்படும் அளவில் மனிதர்களின் வாழ்நாள்கள் கூட நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. உதாரணமாக, இவ்வுலகில் அதிக காலம் ஜப்பானியர்கள்தான் வாழ்கின்றனர். இவர்களின் சராசரி ஆயுள் காலம் 84 ஆண்டுகள் ஆகும். அடுத்ததாகச் சுவிட்சர்லாந்து, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா, ஸ்பெயின், இத்தாலி நாட்டு மக்கள் சராசரியாக 83 ஆண்டுகள் உயிர் வாழ்கின்றனர். சீனர்கள் சராசரியாக 77 வயதுவரை உயிர் வாழ்கின்றனர். ஆனால் ஆபிரிக்க நாட்டு மக்கள் சராசரியாக 64 ஆண்டுகள் மட்டுமே உயிர் வாழ்கின்றனர். அதிலும் ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான நைஜீரியா நாட்டு மக்களின் சராசரி ஆயுள் வெறும் 53 ஆண்டுகள் தான். மேற்கண்ட தகவல் "வளர்ந்த நாட்டில் மக்கள் நீண்ட காலம் வாழ்கின்றனர்" என்பதை எடுத்துரைக்கின்றது.

"வளர்ந்த நாடுகளில் மக்களுக்கு அப்படி என்ன கிடைக்கின்றது?" எனக் கூர்ந்து நோக்கினால், "தேவையான சத்தான உணவுடன் தரமான மருத்துவ வசதிகளும் இந்த நாட்டு மக்களுக்குக் கிடைக்கின்றன" எனத் தெரிகின்றது.




### முயல் ஆய்வு சொல்வதென்ன?

முயல்களும் இப்படித்தான். இயற்கையாகக் காடுகளில் வாழும் இவை குறைவான உணவு கிடைப்பதாலும் பல்வேறு நோய்களின் தாக்கத்தாலும் மற்றும் பிற விலங்குகளால் வேட்டையாடப்படுவதாலும் காடுகளில் வாழும் முயல்கள் சுமார் மூன்று ஆண்டுகளே உயிர்வாழ்கின் றறன.

ஆனால் தேவையான உணவும் நல்ல பராமரிப்பும் கிடைக்கும் படி வீடுகளிலோ அல்லது மிருகக்காட்சி சாலைகளிலோ வளர்க்கப்படும் முயல்கள் 13 ஆண்டுகள்வரை கூட உயிர் வாழ்கின்றன!

### சுதந்திரத்திற்குப் பிறகு மக்களின் ஆயுள்

"இந்தியத் திருநாட்டிலும் 1960 வாக்கில் மக்களின் சராசரி ஆயுள் காலம் 46 ஆண்டுகளாகவே இருந்தது. அப்போதைய இந்தியா இன்றைய நைஜீரியாவைவிட மோசமாகவே இருந்தது.



இந்தியாவில் 1960-க்கு அடுத்த 20ஆண்டுகளில் மக்களின் சராசரி ஆயுள் காலம் 55.6 ஆண்டுகளாக முன்னேறியது.

இங்கு பொருளாதாரம் அவ்வப்போது வீழ்ச்சியைச் சந்தித்தாலும் சுதந்திரத்திற்குப் பிறகு நம் பொருளாதாரம் படிப்படியாக முன்னேறி வருவது மறுக்க முடியாத உண்மை.

### ஆயுளை கணிக்கும் இரத்தப் பரிசோதனை.

இதுபோல உலக மக்களின் சராசரி வாழ்நாளும் படிப்படியாக முன்னேறிக் கொண்டுதான் இருக்கின்றது. இந்த நிலையில், "மனிதனின் அதிகபட்ச வாழ்வுகாலம் தான் என்ன? இதனைக் கண்டறிவது எப்படி?" என்ற கேள்விகள் எழுகின்றன.

"முழுமையான இரத்தப் பரிசோதனை **(Complete Blood test)** செய்து மேற்கண்ட கேள்விகளுக்கு விடை காண முடியும்" என சிங்கப்பூர், ரஷ்யா, மற்றும் அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் இணைந்து கண்டறிந்துள்ளனர். இந்தக் கண்டுபிடிப்பை 2021ஆம் ஆண்டு நேச்சர் கம்யூனிகேஷன்ஸ் என்ற பத்திரிகையில் வெளியிட்டனர்.

இவர்கள் "இரத்தத்தில் அப்படி என்னதான் கண்டறிந்தனர்? மற்றும் எப்படி மனிதர்களின் அதிகபட்ச வாழ்நாளைக் கண்டறிந்தனர்?" என்பதை பார்ப்போம்.

நம் உடல் முழுவதும் உள்ள கோடான கோடி செல்களுக்குச் சுவாசிக்க ஒக்சிசனை இரத்த சிவப்பணுக்கள்தான் எடுத்துச் செல்கின்றன.

வயதாக வயதாக இந்த இரத்த சிவப்பணுக்களின் எண்ணிக்கை குறைகின்றன எனவும், மேலும் வட்ட வடிவில் இருக்கும் இந்தச் சிவப்பணுக்கள் வயதானவர்களின் இரத்தத்தில் ஒழுங்கற்ற உருவத்தில் மாறியும் வருகின்றன எனவும், அதே நேரத்தில் வயதானவர்களின் உடலில் நியூட்ரோபில் என்ற இரத்த செல்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகின்றன எனவும் கண்டுபிடிக்கப்பட்டது.

நியூட்ரோபில் வகை செல்கள் நோய்த் தொற்று ஏற்பட்டால் இரத்தத்தில் அதிகமாகும். காரணம் இவை நோய்கிருமிகளை அழிக்க வல்லது. ஆனால் வயதானவர்களின் உடலில் இவற்றின் எண்ணிக்கை எப்போதும் அதிகமாகவே உள்ளன.

குழந்தைகள் முதல் வயதானவர்கள் வரை லட்சக்கணக்கானவர்களிடம் இவ்வாறு இரத்த சோதனை செய்த ஆராய்ச்சியாளர்கள், "இரத்த சோதனைமூலம் ஒருவரின் வயதைக் கணிக்கலாம். மேலும் இதனை வைத்து மனிதனின் அதிக பட்ச வாழ்நாளையும் அறியலாம்" என கண்டறிந்துள்ளனர்.

இந்த ஆய்வின்படி "மனிதர்களின் ஆயுள் காலம் அதிகபட்சமாக 120 முதல் 150 ஆண்டுகளுக்குள் இருக்கும்" எனக் கணிக்கப்பட்டுள்ளது.

இது உண்மையானால், சுமார் 800 கோடி மக்கள் வாழ்ந்துவரும் இந்தப் பூமியில் யாராவது 120 வயதையும் கடந்து வாழ்ந்திருக்க வேண்டும்.

"அப்படி யாராவது இருகின்றார்களா?" என்ற தேடலில் பிரான்ஸ் நாட்டில் பிறந்த ஜீனி கல்மேன்ட் (துநயடெ ஊயடஅநவெ) என்ற அம்மையார் பூமியில் 122 ஆண்டுகளும் 164 நாட்களும் இவ்வுலகில் வாழ்ந்தது தெரிந்தது.

இவர் 1875ஆம் ஆண்டு பெப்ரவரி 21ஆம் திகதி பிறந்து 1997ஆம் ஆண்டு ஒகஸ்ட் 4 வரை வாழ்ந்துள்ளார். இந்த அம்மையார் போல 122 ஆண்டு உயிர் வாழ நைஜீரிய மக்கள் இரண்டு பிறவிகள் எடுத்தாலும் போதாது!

"இவர்தான் பூமியில் நீண்ட காலம் வாழ்ந்தவர் "என்ற பட்டியலில் முதலிடத்தில் இருக்கிறார். இவர்போல வேறுயாரும் 120 வயதுக்கும் மேல் வாழ்ந்ததாக அறியப்படவில்லை.

(7ஆம் பக்கம் பார்க்க...)

# வெளிநாட்டு எதிரியின் பிடியிலிருந்து லாஸ் ஏஞ்சல்ஸை விடுவிப்போம்: டிரம்ப் சபதம்




லாஸ் ஏஞ்சல்ஸை வெளிநாட்டு எதிரியின் படையெடுப்பிலிருந்து விடுவிப்பேன் என அதிபர் டொனால்டு டிரம்ப் சபதம் விடுத்துள்ளார்.

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில், சட்டவிரோதமாக குடியேறிய 44 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதனால் அங்கு போராட்டம் வெடித்தன. அமெரிக்காவின் இரண்டாவது பெரிய நகரமான லாஸ் ஏஞ்சல்ஸில் தொடர்ந்து 5வது நாளாக போராட்டங்கள் தொடர்வதால், வன்முறையை கட்டுப்படுத்த ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

இது குறித்து அதிபர் டிரம்ப் நிருபர்களிடம் கூறியதாவது: லாஸ் ஏஞ்சல்ஸ் நகரை கும்பல்கள் ஆக்கிரமித்துள்ளனர். ஒரு காலத்தில் லாஸ் ஏஞ்சல்ஸ் தூய்மையான, பாதுகாப்பான, அழகான நகரமாக இருந்தது. லாஸ் ஏஞ்சல்ஸை வெளிநாட்டு எதிரியின் படையெடுப்பிலிருந்து விடுவிப்பேன்.

அவர்களின் பிடியில் இருந்து நாங்கள் லாஸ் ஏஞ்சல்ஸை விடுவித்து அதை மீண்டும் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் மாற்றுவோம். நமது ராணுவ வீரர்கள் கலிபோர்னியாவின் நேர்மையான குடிமக்களை பாதுகாப்பார்கள். இவ்வாறு அதிபர் டொனால்டு டிரம்ப் கூறினார். (ஐ)

## போராட்டத்தை ஒடுக்க கூடுதல் படை அமெரிக்காவில் பதற்றம் அதிகரிப்பு

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சலஸ் நகரில், அதிபர் டொனால்டு டிரம்பின் குடியேற்றச் கொள்கையைக்கண்டித்து நடக்கும் போராட்டம் தீவிரம்அடைந்துள்ள நிலையில், ராணுவத்தின் 'மரைன்' பிரிவின் 700 வீரர்கள் மற்றும் 2,000 அதிரடிப்படை பொலிஸார் அனுப்பி வைக்கப்பட்டு உள்ளனர்.

அமெரிக்க அதிபராக டிரம்ப் பதவியேற்றதில் இருந்து, சட்டவிரோதமாக தங்கியுள்ள வெளிநாட்டவரை வெளியேற்றும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தினார்.

இதன் தொடர்ச்சியாக, விசா காலம் முடிந்த பின் தங்கியுள்ள வர்கள் மற்றும் சட்டவிரோதமாக புலம்பெயர்ந்தவர்களில், நாளொன்றுக்கு 3,000 பேரை கைது செய்ய இலக்கு நிர்ணயித்தார்.

இதையடுத்து, அமெரிக்க குடியேற்ற மற்றும் சுங்க அமலாக்கத் துறையினர் பல்வேறு மாகாணங்களில் அதிரடி சோதனைகள் நடத்தி நூற்றுக்கணக்கானோரை கைது செய்து வருகின்றனர். அப்படி, கடந்த 7ல் லாஸ் ஏஞ்சலஸ் நகரில் பணியிடங்களுக்குள் நுழைந்து சட்டவிரோதமாக புலம்பெயர்ந்தவர்கள் மற்றும் தங்கியிருந்தவர்களை அதிகாரிகள் கைது செய்தனர். அவர்களை உடனடியாக நாடு கடத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதை ஒப்பந்தத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த டேவிட் /ஹவேர்ட்டா என்பவர் வீடியோ பதிவு செய்தார். அதற்காக அவர் அதிகாரிகளால் தாக்கப்பட்டு, கைது செய்யப்பட்டார்.

இதையடுத்து குடியேற்ற மற்றும் சுங்க அமலாக்கத் துறையினரின் சோதனைகள் மற்றும் கைதுகளுக்கு எதிராக பல்வேறு அமைப்பினர், சங்கத்தினர் போராட்டத்தில் இறங்கினர். இந்த போராட்டம் ஒரு சில இடங்களில் வன்முறையானது. கல்வீச்சு, வாகனங்கள் உடைப்பு, தீவைப்பு, சாலை மறியல் போன்ற சம்பவங்கள் நடந்தன.




போராட்டத்தை ஒடுக்க அதிபர் டிரம்ப் உத்தரவின் பேரில் லாஸ் ஏஞ்சலசில் ஏற்கனவே அதிரடிப் படை பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், மேலும் 2,000 அதிரடிப் படை பொலிஸார் மற்றும் 'மரைன்' பிரிவின் 700 வீரர்கள் அனுப்பி வைக்கப்பட்டுஉள்ளனர்.

தற்போது சட்டம் - ஒழுங்கு மாகாண நிர்வாகம்வசம்உள்ளது. அதிரடிப்படை, மாகாணம் மற்றும் மத்திய அரசு இரண்டுக்கும் கட்டுப்பட்டவர்கள்.

இந்நிலையில் ராணுவம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதால், மாகாணத்தின் சட்டம் - ஒழுங்கை ராணுவம் கையில் எடுக்குமோ என்ற பதற்றம் நிலவுகிறது.

வெளிநாட்டு படைகள் ஊடுருவல், அமெரிக்க அரசுக்கு எதிராக பெரிய கிளர்ச்சி போன்ற அரிதான சம்பவங்களின் போதுதான் படைகளை அனுப்ப அதிபருக்கு அதிகாரம் உள்ளது. அப்படி எந்த சூழலும் இல்லாதபோது, மாநில கவர்னரான என்னுடன் கலந்தாலோசிக்காமல் அதிரடிப் படை மற்றும் ராணுவத்தினரை அனுப்பியது அதிகார துஷ்பிரயோகம். அதனால், டிரம்புக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளோம்.

கலிபோர்னியா கவர்னர் காவின் நியூசம், லாஸ் ஏஞ்சலஸ் மேயர் காரன் பாஸ் இருவரும் திறமையற்றவர்கள். லாஸ் ஏஞ்சலசில் அமைதியான வகையில் போராட்டம் நடப்பதாக இருவரும் பொய் கூறுகின்றனர். அவர்களையும் கைது செய்யப் போவதாக எல்லை பாதுகாப்பு ஆணையர் டாம் ஹோமன் எச்சரித்தார். நானாக இருந்தால் அதை செய்திருப்பேன்.

(ஐ)

## டிரம்ப் பற்றி விமர்சனம்: வருத்தம் தெரிவித்தார் எலான் மஸ்க்!



அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் பற்றி, வெளியிட்ட பதிவுகள் வரம்பு மீறி சென்றுவிட்டதால் வருத்தம் தெரிவித்து கொள்கிறேன் என தொழிலதிபர் எலான் மஸ்க் தெரிவித்தார்.

குடியரசு கட்சியைச் சேர்ந்த அமெரிக்க அதிபர் டிரம்பின் நெருங்கிய நண்பராக போன மாதம் வரை இருந்த எலான் மஸ்க், தற்போது அவரின் எதிரியாக மாறிவிட்டார். இருவரின் சமீபத்திய மோதல்களை உலகமே ஆர்வத்துடன் கவனித்து வருகிறது.

டிரம்ப் நிர்வாகம் சமீபத்தில் அறிமுகப்படுத்திய செலவு மசோதாவுக்கு எலான் மஸ்க் கடும் எதிர்ப்பு தெரிவித்தார். இந்த மசோதாவால் நாட்டின் கடன், 200 லட்சம் கோடி ரூபாயாக உயரும் என எலான் மஸ்க் கூறினார்.

பின்னர், ''எலான் மஸ்க்குடனான உறவு முடிந்துவிட்டது. அவர் அதிபர் பதவியின் மாண்புக்கு அவமரியாதை செய்துவிட்டார்'' என அதிபர் டிரம்ப் அறிவித்தார். இதையடுத்து டிரம்ப், எலான் மஸ்க் ஆகிய இருவரும் மாறி மாறி விமர்சனம் செய்தனர். இதனால் இருவருக்கும் இடையே மோதல் உச்சத்தில் இருந்தது.

தற்போது தனது நிலைப்பாட்டில் இருந்து எலான் மஸ்க் பின்வாங்கி உள்ளார். அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: ''கடந்த வாரம் அதிபர் டொனால்டு டிரம்ப் குறித்து வெளியிட்ட சில பதிவுகளுக்கு வருந்துகிறேன். வரம்பு மீறி சென்றுவிட்டதை உணர்கிறேன்". இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ஐ)

## ஆஸ்திரியா பள்ளியில் துப்பாக்கி சூடு 10 பேரை கொன்று மாணவர் தற்கொலை




ஆஸ்திரியாவில் பள்ளி வகுப்பறைக்குள் நுழைந்து மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் 10 பேரை சுட்டுக்கொன்ற மாணவர் ஒருவர், கழிப்பறைக்குள் சென்று சுட்டு, தானும் தற்கொலை செய்து கொண்டார்.

இங்கு நேற்று உள்ளூர் நேரப்படி, காலை 10:00 மணியளவில் தொடர் துப்பாக்கிச் சூடு சத்தம் கேட்டது. இதுகுறித்து உடனடியாக பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்திற்கு கோப்ரா எனப்படும் சிறப்பு பொலிஸார் அனுப்பி வைக்கப்பட்டனர்.

அவர்கள் பள்ளியை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் எடுத்தனர்.

பள்ளியில் சிக்கியிருந்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை பாதுகாப்பான இடத்திற்கு வெளியேற்றினர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த, 30க்கும் மேற்பட்டோர் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவம் குறித்து பொலிஸார் கூறுகையில், 'பள்ளிக்குள் நுழைந்து துப்பாக்கிச்சூடு நடத்தியவர் பள்ளியின் மாணவர்களில் ஒருவர் என தெரிய வந்துள்ளது.

'இரண்டு வகுப்பறைகளுக்குள் சென்று சுட்டுள்ளார். இதில் ஒன்பது மாணவர்கள், ஒரு ஆசிரியர் என 10 பேர் உயிரிழந்தனர்.

'அதன்பின் கழிப்பறைக்குள் சென்று தாக்குதல் நடத்திய மாணவரும் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்துகொண்டார். தாக்குதலுக்கான காரணம் குறித்து விசாரித்து வருகிறோம்' என, கூறினர். (ஐ)

## வடக்கில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மனிதப் புதைகுழி அகழ்வுக்கு நிதி வழங்குவோம், விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்குவோம் என்று வெறும் வார்த்தைகளைக் கூறிவிட்டு இந்த அரசு இருக்கக்கூடாது.

வடக்கில் செம்மணி உள்ளிட்ட பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகளில் இருந்து மீட்கப்படும் எலும்புக்கூடுகளைப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தி உண்மைகளைக் கண்டறிய அரசு முழு வீச்சுடன் செயற்பட வேண்டும்.

குற்றங்கள் நடந்திருப்பின் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நீதி வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த விடயத்தில் நீதிமன்றமும் நடுநிலையுடன் முழு கரிசனை செலுத்தும் என்று நம்புகின்றோம்.” - என்றார்.

## மட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நா.தனஞ்ஜெயன் ஏற்பாட்டில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் மாநகர சபையில் இடம்பெற்றது.

இதன்போது மாநகர சபை மேயராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் சிவம் பாக்கியநாதன் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார்.

பிரதி மேயர் பதவிக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் வைரமுத்து தினேஸ்குமார், பந்து சின்னத்தில் போட்டியிட்ட சுயேச்சைக் குழு உறுப்பினர் கே.சத்தியசீலன் ஆகியோர் முன்மொழியப்பட்டனர்.

அதையடுத்துப் பிரதி மேயரைத் தேர்ந்தெடுக்கப் பகிரங்க வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் வைரமுத்து தினேஸ்குமார் 18 வாக்குகளையும், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட சுயேச்சைக் குழு உறுப்பினர் சத்தியசீலன் 4 வாக்குளையும் பெற்றுக்கொண்டதுடன் 12 பேர் நடுநிலையாக இருந்து கொண்டனர்

இதில் 18 வாக்குளைப் பெற்ற தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் வைரமுத்து தினேஸ்குமார் பிரதி மேயராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், ஞா.சிறிநேசன், வைத்தியர் இளையதம்பி சிறிநாத் ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புதன்கிழமை உத்தரவிட்டுள்ளார். விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள துஷார உபுல்தெனிய இன்று கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

துஷார உபுல்தெனிய, நிதி மோசடிக் குற்றச்சாட்டின் கீழ் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த டபிள்யூ.எச். அத்துல திலகரத்ன என்பவரை ஜனாதிபதியின் பொது மன்னிப்பைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக விடுதலை செய்த குற்றச்சாட்டின் பேரில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜேர்மனியில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதியை வரவேற்கும் உத்தியோகபூர்வ வரவேற்பு நிகழ்வு, ஜேர்மன் ஜனாதிபதி பிராங்க் வால்டர் ஸ்டெய்ன்மியரின் தலைமையில் இன்று மாலை பெர்லினில் உள்ள பெல்வீவ் மாளிகையில் நடைபெறும்.

இதைத் தொடர்ந்து, ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்கவுக்கும் ஜேர்மன் ஜனாதிபதி பிராங்க் வால்டர் ஸ்டெய்ன்மியருக்கும் இடையில் உத்தியோகபூர்வ சந்திப்பு நடைபெறவுள்ளது.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் அரசின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் ஜனாதிபதியுடன் இந்த விஜயத்தில் கலந்துகொண்டுள்ளனர்.

## ஒருமணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதற்கமைய அங்கு இன்று முன்னிலையாகிய ரணில், ஒரு மணித்தியாலம் வாக்குமூலம் வழங்கியதன் பின்னர் அங்கிருந்து வெளியேறினார்.

இலங்கையில் மருந்து வகைகள் இறக்குமதி செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு அளித்திருந்தார். இந்த முறைப்பாடு தொடர்பாக, அமைச்சர்கள் மற்றும் முன்னாள் அமைச்சர்களிடம் இருந்து வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சிப்பாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடவத்தைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் கடவத்தை, மஹகட, சந்திப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த ஓட்டோவில் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கடவத்தை மற்றும் எல்பிட்டிய ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் 30 மற்றும் 44 வயதுடையவர்கள் ஆவர்.

இது தொடர்பில் கடவத்தைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ‘சுமேதா’வை கண்டுபிடித்த அதிகாரிகள்

கடந்த மார்ச்மாதம் 7ஆம்திகதியன்று மரதன்கடவல, கலபிடகலாவில் நடந்த வீதி விபத்திற்குப் பிறகு காணாமல் போன ‘சுமேதா’ யானை மின்னேரியா தேசிய பூங்காவில் காணப்பட்டதாக செவ்வாய்க்கிழமை (10) அன்று தேசிய பூங்காவின் செய்தித் தொடர்பாளர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

லொறியுடன் மோதிய பின்னர் சுமேதா காணாமல் போயுள்ளது. சம்பவத்தைத் தொடர்ந்து, சிறப்புப் பணிக்குழு மற்றும் வனவிலங்கு அதிகாரிகள் இணைந்து விரிவான தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர். இவ்வாறு மீட்கப்பட்ட யானையின் தந்தங்களில் ஒன்று பாதிக்கப்பட்டுள்ளது.

யானை நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதாவும் சிகிச்சை வழங்கப்படுகின்றது எனவும் பூங்காவின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

# “தாய்ப்பால் ஊட்டுவதை ஊக்குவிக்க சட்டமூலம் ”

தாய்ப்பால் ஊட்டுவதை ஊக்குவிக்கும் வகையில் சட்டமூலமத்தை கொண்டுவருவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது. சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தாய்ப்பால் ஊட்டும் குறி காட்டி தொடர்பில் இலங்கை மிகவும் உயர்ந்த மட்டத்தில் இருப்பதுடன், இலங்கை றுழசடன டீசநயளவகநநனபைெ வுசநனெள ஐவைையைவைளைந (WBTI) அமைப்பினால் ‘புசநநெ ளுவயவரள’ வழங்கப்பட்ட நாடாகும்.

வர்த்தக ரீதியான குறிக்கோளை முன்னிலைப்படுத்தி பால்மா உற்பத்தித் தொழிற்றுறை மூலம் பிள்ளைகளுக்கு விடுக்கப்படும் ஒழுக்க நெறிக்கு முரணான மற்றும் பாதகமான தாக்கங்களிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாத்து, பிள்ளைகளின் சுகாதார மற்றும் போசாக்கைப் பாதுகாப்பதும், விஞ்ஞான ரீதியாக உறுதி செய்யப்பட்டுள்ள பிரதான தலையீடாகக் கருதி தாய்ப்பால் ஊட்டுதலைப் பாதுகாப்பதாகும்.

தாய்ப்பால் ஊட்டுதல் தொடர்பான உலக முன்னோடி என்ற ரீதியில் இலங்கை பெற்றுள்ள மரியாதையைத் தொடர்ச்சியாகப் பேணுதலை உறுதி செய்வதையும் குறிக்கோளாகக் கொண்டு தாய்ப்பால் ஊட்டுதலை ஊக்குவிப்பதற்கான சட்டத்தின் மூலம் சட்ட ரீதியான ஏற்பாடுகளை அறிமுகம் செய்வதற்காக 2018-10-16 திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இனத்துவ உணர்வுள்ள அடுத்த தலைமுறையின் உருவாக்கமே தமிழ்த் தேசியத் தளத்தின் அரண்

## முருகானந்தாக் கல்லூரி நிகழ்வில் சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூன் 11

இனத்துவ உணர்வுள்ள அடுத்த தலைமுறையின் உருவாக்கமே

தமிழ்த் தேசியத் தளத்தின் அரணாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

சிறீதரன் எம்.பியின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் 2.1 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட கிளிநொச்சி, முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரியின் பிரதான மண்டபத்தை மாணவர்களின் பயன்பாட்டுக்கு கையளிக்கும் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“இனத்தையும், மொழியையும் நேசிக்கின்ற அடுத்த தலைமுறையின் உருவாக்கம்தான், தனது இருப்புக்காகப் போராடும் ஓர் இனத்தின் எதிர்கால நம்பிக்கையாக அமைய முடியும். அத்தகையோர் தலைமுறையின் தோற்றத்துக்கு வழிகோலும் சமூகக் கடப்பாட்டைக் கொண்ட பாடசாலைகள், கல்வி அடைவுமட்டத்துக்கான தளங்களாக மட்டுமல்லாது, பிள்ளைகளின் ஆளுமை விருத்திக்கும், தலைமைத்துவ வாண்மைக்குமான களங்களை ஏற்படுத்த வேண்டும். அந்தக் காலப்பெரும்பணியை முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரி செவ்வனே நிறைவேற்றி வருகின்றது.” - என்றார்.







கல்லூரியின் முதல்வர் அரசரட்ணம் பங்கையற்செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09 வெளியிடப்பெற்றது.